பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 09 | புதன்கிழமை | 22.04.2020 | கதிர் 168

### இது ரகசியம் அல்ல!

புதிய தேர்தல் திகதி அறிவிக்கப் பட்டமை தொடர்பான சர்ச்சையில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார் தென்னிலங்கைச் சிங்கள ஊடக நண்பர் ஒருவர்.

*“கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடந்தது நவம்பர் 16ஆம் திகதி. அடுத்த நாள் முடிவு* பக்கம் 02

# கொரோனா நீங்கும்வரை பொதுத்தேர்தல் இல்லை!

## மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்



கொழும்பு, ஏப்ரல்.22

**கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் முற்றாக நீங்கும் வரை பொதுத் தேர்தலை நடத் தப்போவதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

**நேற்றுத் தன்னைச் சந்தித்துப் பேசிய கட்சிகளின் செயலாளர்களிடமும் அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருக்கின்றார்.**

அரசியல் கட்சிகளின் செய லாளர்களைதேர்தல்ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுத் தேர்தல் கள் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இரண்டு பகுதிகளாக இந்தச் சந்திப்பு நடந்தது.

இந்தச் சந்திப்பில் பங் கேற்ற கட்சிகளின் செயலா ளர்கள் தேர்தல் திகதி ஜூன் 20 எனத் தீர்மானிக்கப்பட் டமை தொடர்பில் ஆணைக் குழுவின் தலைவரைக் கேள் விகளால் துளைத்தெடுத் தனர். பக்கம் 02

## மே 11 பாடசாலைகளை ஆரம்பிப்பதில் சிக்கல்

கொழும்பு, ஏப்.22

கொழும்பில் நோயாளிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித் ததன் காரணமாக மே 11 ஆம் திகதி பல்கலைக்கழகங்களை யும் பாடசாலைகளையும் மீண் டும் ஆரம்பிக்கும் முடிவை அரசு மறுபரிசீலனை செய்யவுள்ளது.

இது குறித்து ஆங்கில ஊட கம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, பாடசாலைகள் மற்றும் பல் கலைக்கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பான எந்தவொரு முடிவும் சுகாதார அதிகாரிக ளின் பரிந்துரைகளின் பேரில் மட்டுமே எடுக்கப்படும் எனத் தெரி வித்தார்.

இதன் பின்னர் இது பற்றி தீர்மானிப்பதற்கான அதிகாரம் துணைவேந்தர்களுக்கு வழங்கப் படும் என்றும் அமைச்சர் குறிப் பிட்டார்.

முன்னதாக, பக்கம் 02

## மீண்டும் யாழில் கொரோனாத் தாக்கம் அஞ்சுகின்றது அரச மருத்துவர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பா ணத்தில் தளர்த்தப்பட்டு உள்ளது. ஆனாலும் நாட்டில் கொரோனா தொற்றும் வாய்ப்புள்ள அசாதா ரண நிலை நிலவுவதன் காரண மாக பொது மக்கள் சுகாதாரத் துறையினால் கூறப்படுகின்ற விடயங்களை கடைப்பிடிக்காமை மீண்டும் யாழ்ப்பாணத்தில் கொரோனா தாக்கம் ஏற்பட்டு விடும் என அஞ்சுகின்றோம்.

– இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் வைத் தியர் த.காண்டீபன் எச்சரித் துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் மது பானக்கடைகளில் அளவுக்கதி கமாகக் கூடியமையையும் அவர் கள் அளவுக்கதிகமாக ஒன்று கூடி கொள்வனவு செய்தமையை யும் பத்திரிகைகள் மூலம் அனை வரும் அறிந்து கொண்டோம்.

கொரோனாத் தொற்றுநோய் காலப் பகுதியில் மதுபானம், புகைப்பது கொரோனா தொற்றுக் குள்ளானவர்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

மதுபானம் குடிப்பவர்கள் சமூ கத்தில் சமூக விலகலை கடைப் பிடிக்க மாட்டார்கள் என்பது அனைவரும் பக்கம் 02

## ஓட்டோவில் இனிமேல் 2 பயணிகள் மாத்திரமே!



சமூக இடைவெளியைப் பேணு வதற்காக இனிமேல் ஓட்டோப் பயணத்தின்போது இரண்டு பயணிகளை மாத்திரமே ஏற்றிச் செல்ல அனுமதி பக்கம் 02

## தேர்தல் ஆணைக்குழுவின் வர்த்தமானிக்கு எதிராக மனு

கொழும்பு, ஏப். 22

நாடாளுமன்றத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவ தற்குத் தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள வர்த்த மானி அறிவித்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக் கல் செய்யவுள்ளதாக ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவ தற்கான வர்த்தமானி அறி வித் தலை தேர்தல்கள் ஆணைக் குழு நேற்று முன் தினம் இரவு வெளியிட்டது.

இதுகுறித்து கருத்து வெளி யிட்டுள்ள பக்கம் 02

## இலங்கை மாணவர்கள் அழைத்துவரப்பட்டனர்

கொழும்பு, ஏப். 22

பாகிஸ்தானில் உயர் கல்விக் காகச் சென்றிருந்த இலங்கை மாணவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக அனுப் பப்பட்ட விசேட விமானம் நேற்று நாட்டை வந்தடைந்தது.

பாகிஸ்தானின் லாஹூரில் இருந்த 93 மாணவர்களும், கராச்சியில் இருந்த 20 மாண வர்களுமே நேற்று மாலை இவ் வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் கார ணமாக, வெளிநாடுகளில் நிர்க் கதிக்குள்ளாகியுள்ள இலங்கை மாணவர்களை நாட்டுக்கு அழைத் துவரும் அரசின் வேலைத் திட் டத்தின் முதற்கட்டமாக இந்த நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த மாண வர்களை பக்கம் 02

## ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் பழைய நாடாளுமன்று கூடும்

### அகிலவிராஜ் நம்பிக்கை



கொழும்பு, ஏப்.22

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு பொதுத்தேர்தலை நடத்துவதற்கான தினத்தை அறிவித்துள்ள நிலையில் அத னைக் கட்சிகள் ஏற்றுக்கொள்கின் றனவா இல்லையா என்பது இரண்டாம் பட்சமாகும். தேர் தலை நடத்து பக்கம் 02

## 19 பேருக்கு சோதனை; ஆனால் எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஏப்.22

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தே கத்தில் உள்ள 19 பேருக்கு நேற்று பி.சி.ஆர். ஆய்வுகூட பரிசோ தனை நடத்தப்பட்டது என்று யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். பக்கம் 02

### குடும்பத் தலைவர் மீது தாக்குதல்;

## வட்டு.பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 22

வீட்டுக்குள் நுழைந்து இளம் குடும்பத்தலைவர் ஒருவரை சர மாரியாகத் தாக்கிப் பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்ற சம்பவம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு விசாரணைகளை ஆரம் பித்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவ டிக்கை தொடர்பாக விளக்கம் தருமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக ரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அராலி மேற்குப் பகுதியைச் சேர்ந்த முத்து பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*வெளிவந்தது. அதற்கு அடுத்த நாள் கோட்டபாய புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அன்றைய தினம், அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்திய அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாள்.*

*“இப்போது தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்தோடு இந்தப் பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராக அண்ணை மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தப்பட்டிருக்கின்றார்.*

*“அதற்கான தேர்தல் தினமாக இப்போது அறிவிக்கப்பட்டிருப்பது ஜூன் 20ஆம் திகதி. அது தம்பியார் ஜனாதிபதி கோட்டபாயவின் ராஜபக்ஷவின் பிறந்த நாள்.*

*“ஆக அவருக்கு வெற்றி விருது இவரின் பிறந்த நாளில். இருவருக்கு வெற்றித் தினம் அவரின் பிறந்த நாளன்று ...” –* என்றார் என் நண்பர்.

நான் குறுக்கிட்டேன்.

*“இந்தத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த (தேசப்பிரிய), அந்த வேட்பாளர் மஹிந்த (ராஜபக்ஷவுக்குச் சாதமாக எடுத்த திகதி நிர்ணயமோ இது...?”* – என்று நான் ஒரு நக்கலுக்குத் தூண்டில் போட்டேன்.

என் நண்பர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார் தொலைபேசியில்.

*“நீர் பகிடியாகக் கேட்கின்றீர் என்பது எனக்குப் புரிகின்றது. ஆனால் இதனை உண்மையாகக் கருதி – அப்படி அந்த மஹிந்தருக்கு வசதியாக இந்த மஹிந்தர் செய்த ஏற்பாடு என்று கருதி – ஒரு பிரபல அரசியல்வாதி தேர்தல் ஆணையாளரோடு நேரடியாக முண்டுப்பட்டு விட்டார்”* – என்றார் அவர்.

அவர் விடயத்தை விளங்கப்படுத்தினார்.

நேற்று அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல் ஆணையாளர்களைச் சந்தித்தனர் அல்லவா? இரண்டு பகுதியாகச் சந்திப்பு நடைபெற்றது. முதல் சந்திப்பு காலையில். ஜே.வி.பி., ஐ.தே.க. தரப்பு போன்றவை அதில் பங்குபற்றின.

அடுத்த சந்திப்பு பிற்பகலில். 1.30 மணிக்கு ஆரம்பமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ரிஷாத்தின் கட்சி), வாசுதேவநாணயக்காரவின் கட்சி போன்றவை பங்குபற்றின. கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பக்கத்தில் ரவூ ஹக்கீம். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிரதிநிதியாக சட்டத்தரணி காண்டீபன் கலந்து கொண்டார். முன்னர் மஹிந்த காலத்தில், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு எம்.பியாக இருந்தவரும், பின்னர் மஹிந்த தரப்புடன் முரண்பட்டு நிற்பவருமான சஜின் வாஸ் குணவர்த்தனவும் ஒரு கட்சியின் சார்பில் பங்கு பற்றினார்.

நேற்றைய கூட்டத்தில் தேர்தல் ஆணையாளர்கள் மூவரில் இருவரே பங்குபற்றினர். மஹிந்த தேசப்பிரியவும் (தலைவர்), என்.ஜே.அபேசேகரவுமே கலந்து கொண்டனர். மற்றையவரான ரட்ணஜீவன் கூல் மிஸ்ஸிங். நேற்று முன்தினம் காலையில் கொழும்புக்கு வந்து முக்கிய கூட்டங்களில் கலந்து கொண்டு தேர்தல் திகதி ஜூன் 20 என்ற தீர்மானம் எடுத்தவுடன் நேற்றிரவே அவர் யாழ்ப்பாணம் புறப்பட்டு விட்டார் என்று தகவல்.

பிற்பகல் கூட்டத்தில் முதலில் பல்லவியைத் தொடக்கி வைத்தார் ஹக்கீம். அதைப் பின்பற்றி அனுபல்லவி, சரணத்தை உறுப்புகளாகத் தொடர்ந்து உருப்படியை முடித்து வைத்தார் சுமந்திரன்.

ஹக்கீம் – சுமந்திரன் இணை வீசிய பந்துகளில் போல்ட் ஆனது தேர்தல் ஆணையம்.

*“தீர்மானிக்கப்பட்ட ஜூன் 20 என்ற தேர்தல் திகதி இறுதியானது அல்ல. நிலைமையைப் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்கப்படும். தேர்தல் எப்போது என்பது இன்னும் உறுதியில்லை. அதைப் பொதுமக்களுக்கு நாங்களே (தேர்தல் ஆணையமே) சொல்வோம்”* – என்ற நிலைப்பாட்டை தேர்தல் ஆணையாளர்கள் வாயிலிருந்து எடுப்பதே மேற்படி இணையின் எதிர்பார்ப்பு. அது கனகச்சிதமாக நிறைவேறியது.

இனி, மேற்கொண்டு விடயத்தை உயர் நீதிமன்றத்தில் நகர்த்துவதற்குத் தேர்தல் ஆணையத்தின் அத்தகைய பகிரங்க நிலைப்பாடு அவர்களுக்குத் தேவைப்பட்டது. அதில் அவர்கள் நேற்றுக் கணிசமாக வெற்றியும் கண்டனர்.

நாடாளுமன்றம் கலைத்து மூன்று மாதம் ஜூன் 2ஆம் திகதி முடிகின்றது. அதற்கு மேல் ஆக 18 நாள்கள்தான் தேர்தல் தள்ளிப் போயிருக்கின்றது. கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் 18 நாள் தாமதத்தைப் புறக்கணிக்கலாம் – ஒரு பொருட்டாக மதிக்காமல் என்ற ஒரு நிலைப்பாட்டை உயர்நீதிமன்றம் எடுத்து விடலாம். ஆகவே ஜூன் 20 என்ற திகதி நிர்ணயமும் கூட நிச்சயமானதல்ல. அதற்குப் பின்னரும் கூட, மேலும் குறிப்பிடமுடியாத அளவு காலதாமதம் இடம்பெறலாம் என்பதை உயர்நீதிமன்றுக்கு உணர்த்தினால்தான் நீண்ட காலம் நாட்டில் நாடாளுமன்றம் இல்லை என்ற ஜனநாயக விரோத நிலைப்பாட்டை மன்று ஒரு பொருட்டாக மதிக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆக, அந்த விடயத்தில் தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தச் செய்வதில் ஹக்கீம் – சுமந்திரன் இணை நேற்று வெற்றி கண்டது.

அதற்கிடையில் பிரதம தேர்தல் ஆணையாளருடன் முரண்பட்டு மோதிக் கொண்டார் ரிஷாத்.

*“அண்ணனின் வெற்றிக்காகத் தம்பியின் பிறந்த தினத்தில் தேர்தலை – அவரின் விருப்பப்படி – நீங்கள் தெரிவு செய்துள்ளீர்கள்”* என்று ரிஷாத் கூறப்போக, ஏற்கனவே ஏனைய கட்சிக்காரர்களின் சரமாரியான கேள்விக் கணைகளினால் எரிச்சலின் உச்சியில் இருந்த பிரதம தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எள்ளும், கொள்ளும் வெடிப்பது போல ரிஷாத் மீது சீறிப்பாய்ந்து விழுந்தார்.

மொத்தத்தில் நேற்று மாலை தேர்தல் ஆணையர்கள் – கட்சிச் செயலர்கள் சந்திப்பு கொரோனா நோய் எதிர்ப்புப் போராட்டக் களமாக நடந்து முடிந்தது.

–மின்னல்–

## மீண்டும் யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்ததே .

வழக்கமாக மதுபானம் அருந்துபவர்கள், குழுக்களாகச் செய்கிறார்கள்.எனவே சமூக தூரத்தை அவர்களால் பராமரிக்க முடியாது. அது மட்டுமல்லஅவர்களில் ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு இலகுவில் தொற்றுவதற்கு சந்தர்ப்பம் அதிகம்.

இந்த காலகட்டத்தில் மது அருந்துவதால் யாழ்ப்பாணத்தில் அதிக துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிக்கும். இதனால் இதில் ஈடுபடுபவர்களை கைதுசெய்ய காவல்துறை தேவையின்றி தலையிட வேண்டியிருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் சமூகத்திற்குள் தேவையற்ற ஒழுக்கச்சரிவு ஏற்படும்.

மதுபானம் பயன்படுத்துபவர்களில் சிலர் புகைபிடிக்கும் பழக்கத்திலும் ஈடுபடுவர்.

இத்துடன் புகைபிடிக்கும் நபர்கள் கோவிட் –19 நோயால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு இந்த நோய் மோசமான விளைவுகளை மட்டுமல்ல மரணத்தையும் ஏற்படுத்தலாம்.

புகையிலைப் பொருள்களையும் புகைப்பதைத் தவிர்க்குமாறும், மதுபானம் அருந்துவதை தவிர்க்குமாறும் நாங்கள் பொது மக்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

இதே வேளை இன்றுமுதல் மறு அறிவித்தல் வரை நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் பெருமளவிலான பொருளாதார இழப்பு ஏற்பட்டாலும் ஜனாதிபதி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று கொரோனா தொற்றில் இருந்து மக்களின் நலனுக்காக நல்ல முடிவை எடுத்திருக்கின்றார்.

புகைத்தல் மக்களுக்கு கொரோனா நோயை மட்டுமல்ல, புற்றுநோய் உட்பட பல்வேறு நோய்களை ஏற்படுத்துவதனால் புகையிலைப் பொருள்களை மக்களுக்கு விற்பனை செய்வதை வியாபாரிகள் தவிர்க்குமாறும், வடமாகாண சுகாதாரத்துறையினர் இது சம்பந்தமாக வடமாகாண உயர் அதிகாரிகளுடன் இனணந்து புகைத்தலை இக் கொரோனா தொற்றுக்காலத்தில் முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். – என்றார் அவர்.

## ஜூன் 2ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினம் பொருத்தமானதா என்று சுகாதாரத்துறையினருடன் கலந்தாலோசித்து மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் , ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் பழைய நாடாளுமன்றம் கூடும் என்று தான் எதிர்பார்க்கின்றார் எனவும் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல்கள் ஆணைக்குழுவில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினம் பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு நாம் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினோம்.

காரணம் தற்போது இடர் வலயங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் கூட்டங்கள் , மத உற்சவங்கள் உள்ளிட்டவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வேட்பாளர்கள் அதனைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. மக்கள் சந்திப்புக்களை நடத்துகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் வைரஸ் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்தவாறுள்ளது. எனவே தேர்தலை நடத்துவதற்குப் பொருத்தமான சூழல் நாட்டில் உள்ளதா என்று ஆராய வேண்டும். இது தொடர்பில் ஆணைக்குழு சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் தேர்தல் அத்தியாவசியமானதாகும். ஆனால் மக்களின் உயிரை கேள்விக்குட்படுத்தி தேர்தலுக்குச் செல்ல தேவையில்லை. அரசமைப்பின்படி ஜூன் மாதம் 2 ஆம் திகதி புதிய நாடாளுமன்ற அமர்வு இடம்பெற வேண்டும்.

ஆனால் ஜூன் 20 ஆம் திகதியே தேர்தலுக்கான தினம் நியமிக்கப்பட்டுள்ளது. எனவே அரசமைப்பு ரீதியாக ஏற்பட்டுள்ள சிக்கலை அவதானிக்கும்போது ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் பழைய பாரா நாடாளுமன்றம் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம்–என்றார்.

## 19 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில், ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள 18 பேருக்கும் நேற்று பரிசோதனை நடத்தப்பட்டது.

அவர்களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தப் பரிசோனைகளின் முடிவின்படி எவருக்கும் தொற்றில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத், ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் முடிவுக்கு எதிராக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் நிச்சயமாக நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும் என்று தெரிவித்தார்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராசா கண்ணதாசன் (வயது–23) என்ற குடும்பத்தலைவரின் வீட்டில் 19 ஆம் திகதி இரவு 8 மணியளவில் அயல்வீட்டைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கதைத்துக் கொண்டிருந்துள்ளனர்.

அந்தக் குடும்பத்தலைவரின் வீட்டு வீதியால் சிவில் உடையில் பயணித்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் அறுவர் திடீரென்று அவரது வீட்டுக்குள் நுழைந்து, ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் அயல் வீட்டுக்காரரை எதற்காக வைத்துள்ளாய் வாக்குவாதப்பட்டனர்.

அத்துடன் அங்கிருந்த இளைஞர்களுக்குக் கொட்டன் தடியால் பலமாகத் தாக்கித் துரத்திய பின் குடும்பத்தலைவரின் அடையாள அட்டையைக் கேட்டனர். இதையடுத்து, அவரது மனைவி அடையாள அட்டை எடுப்பதற்காக உள்ளே சென்ற சமயம், பொலிஸாருக்கும் குடும்பத்தலைவருக்கும் வாக்குவாதம் முற்றிப் பொலிஸார் குடும்பத்தலைவரைக் கொட்டன் தடியால் சரமாரியாகத் தாக்கினர் எனக் கூறப்படுகின்றது.

பொலிஸாரின் பலமான தாக்குதலால் குடும்பத்தலைவரின் வாய் மற்றும் ஏனைய உடற்பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டு அவர் மயங்கிய நிலையில், அவரை மோட்டார் சைக்கிளில் தூக்கி ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்வதற்குப் பொலிஸார் முயன்றவேளை, அவரது மனைவி கூக்குரலிட்டார்.

அவரது சத்தத்தைக் கேட்டுச் சம்பவ இடத்துக்குச் சென்ற அக்கம் பக்கத்தினரைப் பொலிஸார் துரத்திச் சென்று கடுமையாகத் தாக்கியமை மட்டுமல்லாமல் தமது ஆடைகளைக் கூடப் பொலிஸார் கிழித்துத் தாக்கினர் எனப் பாதிக்கப்பட்ட பெண்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் அடாவடிகளைப் பொறுக்கமாட்டாது ஆத்திரமுற்ற அப்பகுதி இளைஞர்கள் பொலிஸார் மீது கற்களால் எறிந்தமையைப் பொலிஸார் காணொளி எடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அராஜகத்தில் ஈடுபட்ட பொலிஸார் மதுபோதையில் நின்றனர் எனவும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

என் கணவர் கடற்றொழில் செய்பவர். பொலிஸார் வருவதற்குச் சற்று முன்தான் தொழிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியிருந்தார். அவரைச் சாகுமளவுக்குப் பொலிஸார் கொட்டன் தடிகளால் அடித்தனர் எனவும் அவரது மனைவி கூறியுள்ளார்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்கப்பட்ட தேர்தலின் திகதி, கட்சிகளின் செயலாளர்களுடன் கலந்துரையாடாமல் – சுகாதார, மருத்துவத் தரப்புகளின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமல் – எப்படி தீர்மானிக்கப்பட்டது என ஆணைக்குழுவின் தலைவரிடம் அவர்கள் கேள்வியெழுப்பினர். கட்சிகளின் செயலாளர்கள் முன்வைத்த கேள்விகளால் திணறிப்போனார் ஆணையாளர்.

கொரோனா அச்சம் நீங்கும் வரை தேர்தலைத் தான் நடத்தப்போவதில்லை என்று அவர் கட்சிகளின் செயலாளர்களிடம் உறுதியளித்தார். இந்தத் தீர்மானத்தை நீங்கள் மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் எனக் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கும் அவர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் –

பொதுத்தேர்தலை நடத்த முடியுமா என்ற சந்தேகம் இன்னமும் உள்ளது. பொதுத் தேர்தலைப் பகுதி பகுதியாக நடத்தும் சாத்தியம் இல்லை. அவ்வாறான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டாலும், அனைத்துக் கட்சிகளின் நிலைப்பாட்டையும் ஆராய வேண்டும்.

பொதுத் தேர்தலில் 55 வீத வாக்குகள் பதிவு செய்யப்படுவது போதுமானதல்ல. குறைந்தது 70 வீத வாக்காளர்களாவது வாக்களிக்கவேண்டும். இப்போதுள்ள நிலையில் அது சாத்தியமில்லை.

கொரோனா தொற்றுப் பரவலை முதலில் முழுமையாக நாட்டில் இருந்து அகற்ற வேண்டும். அதற்கான வேலையை முதலில் பார்க்கவேண்டும். அதன் பின்னர் தேர்தலைப் பார்த்துக்கொள்ளலாம்.

வைரஸ் தொற்று அச்சுறுத்தலுடன் தேர்தலை நடத்தமாட்டோம். சுகாதார அதிகாரிகள் கூறும் வரை எமது தரப்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படாது. ஒருசிலர் சொல்வதைக் கேட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளமாட்டோம் – என்றார்.

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து வருவதற்காக ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல். – 1206 விமானம் பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தில் இருந்து நேற்று மாலை 6.05 அளவில் இலங்கையை வந்தடைந்தது.

விமானிகள் உட்பட 17 பேர் அடங்கிய பணியாளர் குழுவொன்றும் இதன்போது பயணித்துள்ளது. இந்தநிலையில் இந்த விமானத்தில் வருகை தந்த மாணவர்களை தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## மே 11 பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் கல்வி ஊழியர்களுக்கான பணிகளை மீண்டும் தொடங்க முடிவு செய்திருந்தோம். இருப்பினும் முடிந்தவரை ஒன்லைனில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளோம் – என்றார்.

## ஓட்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அறிவிப்பு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஊரடங்கு தளர்த்தப்படினும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# குறைந்த எண்ணிக்கையானோரின் பங்குபற்றுதலுடன் முறையாக அத்தியாவசிய சேவைகளைப் பேணுங்கள்!

## அமைச்சுக்களின் செயலர்கள், நிறுவனத் தலைவர்களுக்கு கோட்டா பணிப்பு

கொழும்பு,ஏப்.22

***ஊரடங்கு சட்டத்தைத் தளர்த்தியதன் பின்னர் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில் குறைந்தளவானோரின் பங்குபற்றுதலுடன் அத்தியாவசிய சேவைகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.***

***அரச மற்றும் தனியார் துறைகளின் சேவைகளை மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலையில் பேணுவதற்கு உதவும் வகையில் திட்டமிடுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.***

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நீர்க்குழாய்களை பதித்தல், வீதிகளை நிர்மாணித்தல் போன்ற கட்டுப்பாட்டுடன் செய்யக்கூடிய அபிவிருத்தி பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஊழியர்களை கடமைக்காக அழைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியும் அறிவுறுத்திய ஜனாதிபதி வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளைப் பின்பற்றி ஊழியர்களை அழைப்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



மேல் மாகாணம் உட்பட ஊரடங்கு சட்டம் தொடர்ச்சியாக அமுலில் உள்ள பிரதேசங்களில் சேவைகளை பேணுவதற்கான திட்டத்தை தயாரிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களின் மூலம் விவசாய அறுவடைகளைகிராமங்களில்இருந்து நகரங்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதன் வாயிலாக விவசாயிகளுக்குப்பாரியநிவாரணம் கிடைக் கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வைத்தியசாலைகள் மற்றும்மருந்தகங்கள்வழங்கும் மருந்துகளை தபால் அலுவலகத்தின் ஊடாக விநியோகிப்பதன் மூலம் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த காலத் தில் நோயாளிகளுக்கு பெரும் சேவையொன்று வழங்கப்பட்டது.

தபால் அலுவலகத்தின் ஊடாகப் பட்டியல்களைச் சேகரித்தல், வங்கி வைப்புகளை பொறுப்பேற்றல் உள்ளிட்ட வழங்க முடியுமான சேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு அரசாங்கம் முறையானதொரு நிகழ்ச் சித்திட்டத்தை பின்பற்றிய போதும் மக் கள் அறிவுறுத்தல்களை உரிய முறை யில் பின்பற்றாமை நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு தடையாக அமைந் துள்ளது.

மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் நோக்குடன் ஊரடங்கு சட்டத்தை தளர்த்தி சேவைகளைமுன்னெடுக்கும்போதும்வைரஸை கட்டுப்படுத்தும் வகையில் நட வடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டும்என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தர உட்பட அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## மஞ்சள் தூளுக்கு விலை நிர்ணயம்

கிலோ மஞ்சள் தூளுக்கான அதிகபட்ச சில்லறைவிலைநேற்றுமுதல்நடைமுறைக்கு வரும் வகையில் 750 ரூபா ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

## பேலியகொடை மீன் சந்தை பூட்டு!

கொழும்பு, ஏப். 22

பேலியகொடை மீன் சந்தையை இன்று முதல் 03 தினங்களுக்கு மூடுவதற்கு வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பிலியந்தலையைச்சேர்ந்த மீன்வியாபாரி ஒருவர் நேற்றுமுன் தினம் கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். இவர் மீன் கொள்வனவு செய்வதற்காக அந்தச் சந்தைக்கு வருகை தந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொடை மீன் சந்தை வளாகத்தில் 154 மீன் கடைகள் உள்ளன. இந்நிலையில் அதன் விற்பனையாளர்கள் இன்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் எனவும், வர்த்தக சங்கத்தின் தலைவர் ஜயசிறி விக்ரமஆராச்சி தெரிவித்துள்ளார்.

## தொடர் திருட்டுகளில் ஈடுபட்ட கும்பல் வசமாகச் சிக்கியது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 22

வல்வெட்டித்துறையில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்த குழுவொன்று பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் திருடப்பட்ட பணம், நகை, தொலைபேசி எனப் பல பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

வல்வெட்டிதுறை நெடியாகாடு எனும் பிரதேசத்தில் கடந்த தைப்பொங்கல் தினத்தில் நடைபெற்ற பட்டத்திருவிழாவின்போது சிறுவனொருவன் புகைப்பிடிப்பதை ஒரு குழுவினர் வீடியோ எடுத்துள்ளனர். அதன் பின்னர் அந்த வீடியோவை சிறுவனின் தாய் தந்தையரிடம் காட்டப்போவதாக அவனை மிரட்டியுள்ளனர்.

இவ்வாறு மிரட்டி வந்த நிலையில் சில தினங்களின் பின்னர் அந்த வீடியோவை மீண்டும் பெற்றோரிடம் காட்டப்போவதாகவும் இல்லாவிட்டால் வீட்டிலிருந்து நகை மற்றும் பணத்தை எடுத்துவருமாறும் சிறுவனிடம் அந்தக் கும்பல் கூறியுள்ளது.

இதனையடுத்து சிறுவனும் வீட்டிலிருந்த பணம் மற்றும் நகை என நாளாந்தம் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்துள்ளார். இதற்கு மேலாக வெளிநாட்டு நாணயத்தாள்களையும் சிறுவன் கொண்டு வந்து கொடுத்துள்ளார். தொடர்ந்து சிறுவனை மிரட்டி வந்த அந்தக் கும்பல் வீட்டிலிருந்த ஏனைய பல பொருள்களையும் எடுத்து வருமாறு கூறி அதனையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு சில மாதங்களாக அந்தச் சிறுவனை மிரட்டி பணம் மற்றும் நகைகளைப் பெற்று வந்த கும்பல் நாட்டில் கொரோனா அச்சத்தால் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கைத் தொடர்ந்து இரவுவேளையில் திருட்டிலும் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு அப்பகுதியில் வீடொன்றில் கூரை பிரித்து திருட்டில் ஈடுபட்டுள்ளது. அதேபோன்று இன்னொரு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்த ஐந்து பேர் அடங்கிய கும்பல் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து அவர்கள் ஐந்து பேரையும் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் போது சிறுவனை மிரட்டிப் பணம் நகை என்பன பறித்துவந்த விடயம் உள்ளிட்ட ஏனைய பல திருட்டுக்கள் தொடர்பிலும் வெளிவந்துள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிரந்து எட்டரை இலட்சம் ருபா பெறுமதியான திருடப்பட்ட நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், தொலைபேசிகள் எனப் பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற பொலிஸார் சந்தேக நபர்கள் ஐந்து பேரையும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545



ஊடக குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத்தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊகசுத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு: 076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## மைத்திரி வழியில் கோட்டாவும் உயர்நீதிமன்றிடம் பாடம் படிப்பார்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் – 2018 இறுதியில் – அப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, தமது அதிகாரம் வானளாவ உயர்ந்தது என்ற மமதையுடன் செயற்பட்டபோது, நீதிமன்றமே அவருக்கு உண்மை நிலையை உறைப்பாக எடுத்துரைக்கும் என இப்பத்தியில் விடாது சுட்டிக்காட்டி வந்தோம்.

அவரது அரசியல் சதிப் புரட்சி நடவடிக்கை மற்றும் நாடாளுமன்றத்தை முறையற்ற விதத்தில் கலைத்தமை ஆகியவற்றுக்குக் குட்டுப் போட்டால் போல ஏகமனதான தீர்ப்பு ஒன்றை ஏழு நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் வழங்கி, விடயங்களை நேர்சீராக்கியமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

சரித்திரம் மீளத் திரும்புகின்றதோ என்று எண்ணும் விதத்தில் விடயங்கள் மீளவும் கட்டவிழ்கின்றன.

நாடாளுமன்றம் முறையற்ற விதத்தில் கலைத்துத்தான், உயர்நீதிமன்றத்தின் குட்டை வாங்கிக் கட்டிக் கொண்டார் மைத்திரியார்.

இப்போது நாடாளுமன்றக் கலைப்பு விடயத்தில்தான் இந்த ஜனாதிபதியும் உயர்நீதிமன்றத்திடம் பாடம் படிக்க வேண்டியவராக இருக்கின்றார் போல் தோன்றுகின்றது.

நாடாளுமன்றக் கலைப்பை ஒட்டி தமக்குள்ள அதிகாரங்கள், எல்லைகள் தொடர்பில் அவர் செய்யும் வியாக்கியானம் உயர்நீதிமன்றத்தினால் திருத்தப்பட்டு, அவருக்கு விளக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்றே தெரிகின்றது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எந்தச் சட்டத்தின் கீழும் மீளக் கூட்டுவதற்கான அதிகாரம் தமக்கு இல்லவே இல்லை என்று திரும்பத் திரும்பச் சாதிக்கின்றார் அவர்.

ஆனால் அந்த அதிகாரம் அவருக்கு இருப்பது தொடர்பான அரசமைப்பு ஏற்பாடு வலு தெளிவானது; வெளிப்படையானது.

இதுவரை இருந்த நாடாளுமன்றத்தை அதன் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஆறுமாதம் இருக்கையிலேயே – அதைக் கலைப்பதற்கான அதிகாரம் அவருக்கக் கிட்டி – ஒரு சில மணி நேரத்திலேயே – அதைக் கலைத்தார் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ.

இதுவே, அந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து, அதன் பதவிக் காலத்தை முடிவுறுத்துவதில் எவ்வளவு தீவிரமாக – அவசரமாக – அவர் இருந்தார் என்பதற்கு நல்ல சான்று. அதைக் கலைப்பதற்கான அதிகாரம் தமக்கு வந்த அடுத்த நொடியே அதைக் கலைத்த ஜனாதிபதி கோட்டபாயவுக்கு, அதைத் திரும்பவும் கூட்டச் சொல்வது எவ்வளவு தூரம் அசௌகரிமான விடயமாக இருக்கும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

அதற்காக அதை மீளக் கூட்டமாட்டேன், அதற்கு எனக்கு விருப்பம் இல்லை என்று அவர் கூறுவது வேறு. அப்படிக் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம். அது அவரது அரசியல் விரும்பு – வெறுப்பு தீர்மானங்களை ஒட்டியது. அதை விமர்சிக்க முடியாது.

ஆனால் அதற்காக அப்படி அந்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும் அதிகாரம் தமக்கு இல்லவே இல்லை என்று அவர் விளக்கம் கூறுவது தவறாகும். மக்களையும் நாட்டையும் பிழையாக வழி நடத்தும் சட்ட வியாக்கியானமாகும் அது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை நாட்டின் நெருக்கடி கருதி ஜனாதிபதி மீளக் கூட்டமுடியும் என்பது மிகத் துலாம்பரமாக அரசமைப்பில் உள்ளது.

அவர் கலைத்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டி ஒரு நெருக்கடி நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாடாளுமன்றம் முற்கூட்டியே கலைக்கப்பட்டால், அடுத்த மூன்று மாத காலத்துக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்பது அப்படி நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைப்பதற்கு ஜனாதிபதிக்குத் கொடுக்கப்பட்ட அதிகாரத்துக்கு அரசமைப்பில் விதிக்கப்பட்ட மேலதிக நிபந்தனையாகும்.

தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியால் அந்த நிபந்தனையயை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது – கொரோனா வைரஸ் பரவலினால்.

இதன் காரணமாகக் கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீளக் கூட்டுங்கள் என்ற அழுத்தம் பல பக்கங்களில் இருந்தும் அவருக்கு வருகின்றது. தேர்தல் தள்ளிப் போவதால் ஏற்படக் கூடிய அரசமைப்பு நெருக்கடியிலிருந்து நாடு வெளியே வருவதற்கு அது ஒன்றே இலகுவான – சாத்தியமான – சர்ச்சையற்ற – மார்க்கமாகும்.

அது புரிந்தமையால்தான், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான அதிகாரம் எனக்குக் கிடையாது என்று கதை விடுகின்றார் – நடிக்கின்றார் – அவர்.

விவகாரம் நீதிமன்றத்துக்குப் போனதும் இவ்விடயத்தில் அவருக்குள்ள அதிகாரத்தை உயர்நீதிமன்றம் உரிய வகையில் அவருக்கு விளங்கப்படுத்தி அறிவுறுத்தும் என எதிர்பார்க்கலாம்.

# இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள சமயத்தில் தேர்தலை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது

## கூட்டணி ஆனந்தசங்கரி காட்டம்



கொழும்பு,ஏப்.22

”மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், தேர்தலை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும் – எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

சர்வதேசமே தனது நிகழ்ச்சி நிரலில் இயங்கமுடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இலங்கையில் தேர்தலை நடத்துவது மனிதாபிமானமுள்ள எந்த ஒரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

'கொரோனா' நோயின் தாக்கத்தினால் மக்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களுக்கான தேவைகளும் அதிகமாக உள்ளன. அவற்றைத் தீர்த்துவைக்காமல் தேர்தலுக்கு செல்வதென்பது அவர்கள் மீது தேர்தலை திணிப்பதற்கு ஒப்பானதாகும்.

இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாடம் நாள் கூலி வேலைக்குச் சென்று தங்களது குடும்பங்களைப் பாதுகாத்து வந்தவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள் பற்றி சிந்திக்காமல் தேர்தலுக்குச் செல்வதென்பது மனிதாபிமானமற்ற ஜனநாயகத்தை மீறுகின்ற செயலாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் நிவாரணங்கள் சரியான முறையில் செயற்படத்தப்படவில்லை. அதுமட்டுமல்ல 'கொரோனா' நோயின் அச்சத்தில் இருந்து மக்கள் முழுமையாக இன்னும் விடுபடவில்லை. 'கொரோனா' நோயின் தாக்கம் முற்று முழுதாக நீங்கிவிடும் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை.

இவற்றைப் பற்றிச் சிந்தித்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிய பின்னர் தேர்தலை நடத்துவது பற்றி ஆலோசனை செய்யுமாறு ஜனாதிபதியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

இதற்கு முன்னர் சில விரும்பத்தகாத நெருக்கடிகள் ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் நடந்த தேர்தல்கள் அனைத்திலும், ஜனநாயகத்துக்கு எதிரானதாக விரும்பத்தகாத முடிவுகளே வெளிவந்தன.

அதே போல தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் நடந்தால் அது சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் அமையாததோடு எதிர்காலத்தில் இது ஒரு முன்னுதாரணமாகவும் அமைந்துவிடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அனைவரும் பொறுப்புணர்வோடு செயற்பட்டு கொடிய நோய் பரவாமல் காக்க உதவுங்கள்!

## செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் வேண்டுகோள்



அனைவரும் பொறுப்புணர்வோடு செயற்பட்டு கொடிய நோய் பரவாமல் காக்க உதவ வேண்டும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும். தெல்லிப்பழை ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி. ஆறு.திருமுருகன். இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்த வேண்டுகோளின் விவரம் வருமாரு:-

உலகம் முழுவதும் வாழும் மக்கள் கொரோணா என்னும் கொடிய நோயின் துன்பத்திலிருந்து விடுபட அனைவரும் தொடர்ந்து பிரார்த்தியுங்கள். உயிர்களைக் காப்பதற்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது மனித நேயத்தோடு செயற்படும் மருத்துவ சமூகத்துக்கும் ஏனையவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு அவர்களின் வாழ்வுக்காகவும் அனைவரும் கடவுளை மன்றாடுங்கள்.

இலங்கைத் திரு நாட்டில் இக்கொடிய நோய் பரவாமல் இருப்பதற்காக பல ஒழுங்கு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு மருத்துவ சமூகமும். ஏனைய பொறுப்பு மிக்க பெரியவர்களும் விடுத்த வேண்டுதலை அனைவரும் மதித்து நடவுங்கள்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டமை அவசர தேவைகளுக்கு மட்டும் என்பதை அனைவரும் உணருங்கள். மிகப்பாதுகாப்பாக இருக்கவேண்டிய காலமென மீண்டும் மீண்டும் மருத்துவ சமூகம் மன்றாடிக் கேட்டவண்ணமுள்ளார்கள். ஆனால் ஊரங்கு தளர்த்திய வேளை எமது சமூகம் பொறுப்பாக நடக்கவில்லையெனப் பலரும் கவலையடைகிறார்கள்.

ஒரு நேரப்பசியையாவது போக்குவதற்கு உதவுங்கள் எனப்பலரும் குரல் கொடுத்த போது தங்கள் நாட்டின் அவலச்சூழலிலும் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் உதவினர். அவர்களின் உதவிகளால் உலர்உணவும், சமைத்த உணவும் ஊர்தோறும் பலர் வழங்கி உதவினர். உள்ளூர் அமைப்புக்கள்,சமய நிறுவனங்கள் இளையதலைமுறை இரவு பகலாகச் செய்த தொண்டுகளை நினைத்துப்பாருங்கள். ஊரடங்கு நீக்கப்பட்ட முதல் நாள் முதல் வேலையாக மதுபானக் கடைகளில் வரிசையில் பலர் ஆரவாரமாக நின்று அவமானத்தை எம்மண்ணுக்கு தேடித்தந்துள்ளார்கள். இனிமேலாவது சிந்தியுங்கள். எங்கள் மீது இரக்கப்படும் சமூகம் எவ்வளவு தூரம் கவலைப்படுவார்கள் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

சமூக ஒன்று கூடலைத் தவிருங்கள். சகல வைபவங்களையும் ஒத்திவையுங்கள். அனைவரும் பொறுப்புணர்வோடு கொடிய நோய் பரவாமல் காக்க உதவுங்கள். சகல துறைசார்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் ,அமைப்புக்களும் மிகவும் ஒத்துழைத்து, சமூகத்தைக் காக்கும் முயற்சியைத் தொடர வேண்டி அமைகிறேன். - என்று உள்ளது.

## நாளை

**23.04.2020**
**வியாழக்கிழமை**

நட்சத்திரம்: அச்சுவினி பி.ப 04.34
திதி:அமாவாசை மு.ப 08.42 வரை
இராகுகாலம்:01.30 - 03.00
சுப நேரம்:07.30 - 09.00

# தொற்றின் எண்ணிக்கை 25 லட்சத்தை தாண்டியது

## ஒரு லட்சத்து 59 ஆயிரம் சாவுகள்

சீனா, ஏப்ரல் 22

கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதும் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 25 லட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கும் மேலாக பரவிப் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றது.

தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியமும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இதற்கிடையே, தற்போதையை நிலவரப்படி உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பால் ஒரு லட்சத்து 71 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 6 லட்சத்துக்கு 59 ஆயிரம் பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர்.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதும் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 25 லட்சத்தை தாண்டியுள்ளது.

இதுவரை 57 ஆயிரத்துக்கு 600க்கு மேற்பட்டோரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தடையிடுவதை உடன் நிறுத்துங்கள்!

## அமெரிக்காவை விமர்சிக்கிறது ஈரான்

மற்றைய நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துங்கள் என்று அமெரிக்காவை ஈரான் கடுமையாக விமர்சித்துள்ளது.

அணு ஆயுதச் சோதனை காரணமாக, ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. இதனால் அந்த நாடு நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அதிலும் கொரோனா பாதிப்பு சமயத்தில் இந்த நெருக்கடி மேலும் அழுத்தம் தருவதாக இருந்தது.

மனிதாபினமானம் கருதி கொரோனா சமயத்தில் பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும் என்று ஈரான் வலியுறுத்தியிருந்தது. ஆனால் அது நடக்கவில்லை. பதிலாக கொரோனாவை எதிர்கொள்வதற்கு உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்தது. அதனை ஏற்க ஈரான் மறுத்து விட்டது.

இந்த நிலையில் ஈரான் இன்னும் சில மாதங்களில் வென்டிலேட்டர்களை ஏற்றுமதி செய்யும். நீங்கள் செய்ய வேண்டியது மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துவது. குறிப்பாக எங்கள் நாட்டு விவகாரத்தில். நாங்கள் எந்த அமெரிக்க அரசியல்வாதியிடமும் ஆலோசனை பெற விரும்பவில்லை என்று தெரிவித்தார் ஈரானிய அயலுறவுத் துறை அமைச்சர் ஜாவத் சாரிப்.

இதற்கிடையே கொரோனா வைரஸ் பரவல் முழுமையாகக் கட்டுக்குள் வருவதற்கு முன்பாகவே ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தத் தொடங்கியுள்ளது ஈரான்.

ஈரானில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் திங்கட்கிழமை திறக்கப்பட்டன. வணிக வளாகங்கள் செயல்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஈரானின் இந்த முடிவு கொரோனா தொற்றின் இரண்டாவது அலை ஈரானைத் தாக்க வழிவகுக்கக்கூடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

ஈரானில் இதுவரையில் 83 ஆயிரத்து 505 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 59 ஆயிரத்து 273 பேர் குணமடைந்தனர். 5 ஆயிரத்து 209 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

# தென்கொரியா இயல்புக்கு திரும்பியது!

தென்கொரியாவில் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர்.

பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிக்குப் பிறகு அதாவது இரண்டு மாதங்களுக்குப் பிறகு தென்கொரியாவில் கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை ஒற்றை இலக்கத்திற்குப் பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு ஊரடங்கு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு அந்த நாட்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர்.

பேரங்காடிகள், பொழுதுபோக்கு அரங்குகள், தொழில் நிறுவனங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து 31 வயதான பொறியாளர் ஒருவர் கூறும்போது, நான் சியோலில் உள்ள கால்பந்துக் குழுவில் விளையாடி வருகிறேன். சுமார் இரு மாதங்களுக்குப் பிறகு சனிக் கிழமைதான் நான் விளையாட மைதானத்துக்கு வந்திருக்கிறேன் என்றார்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கல்வி நிலையங்கள் திறக்கப்படவில்லை. தொடர்ந்து இணைய வழி மூலமே மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

தென்கொரியாவில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தியதற்காக உலக நாடுகள் பலவற்றால் அந்த நாட்டு அதிபர் பாராட்டப்பட்டு வருகிறார். இதன் காரணமாகவே நாடாளுமன்றத் தேர்தலில் அந்நாட்டு மக்கள் மூன் ஜே இன்னுக்கு வெற்றியைத் தேடித்தந்தனர்.

தென்கொரியாவில் கொரோனா தொற்றுக்கு 10 ஆயிரத்து 674 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

# வைரஸை மனிதனால் உருவாக்க முடியாது வுஹான் வைராலஜி நிறுவனம் தெரிவிப்பு!

## அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில்

தற்போதைய நிலையில் ஒரு வைரஸை மனிதனால் செயற்கையாக உருவாக்க முடியாது, கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் நகர வைரஸ் ஆய்வகத்தில் நிறுவனத்தில் இருந்து கவனயீனமாகக் கசிந்தது என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது, அரசியல் நோக்கம் கொண்டது என்று அந்த ஆய்வு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகையே கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கிற கொரோனா போன்ற வைரஸை மனிதனால் உருவாக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா முதன் முதலில் கண்டறியப்பட்ட வுஹான் நகரிலேயே சீனாவின் மிகப் பெரிய வைரலஜி இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அமெரிக்கப் பத்திரிகையான வோஷிங்டன் போஸ்ட் மற்றும் தொலைக்காட்சி நிறுவனமான பொஃக்ஸ் நியூஸ் ஆகியன இந்த நிறுவனத்தில் இருந்துதான் கொரோனா வைரஸ் பரவியது என்று செய்தி வெளியிட்டன.

அமெரிக்க அதிபர் ட்ரம்பும் இந்தச் செய்திகளை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தார், வைரஸ் எப்படி எங்கிருந்து பரவியது என்பது தொடர்பில் அமெரிக்கா விசாரணை நடத்துகின்றது என்றும் அவர் அறிவித்தார்.

அது மட்டுமல்ல, சீனாவின் வைராலஜி இன்ஸ்டிடியூட்டுக்கு அதிபர் ஒபாமா காலத்திலிருந்து அளித்து வந்த நிதி உதவி நிறுத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய அந்த ஆய்வுக் கூடத் தின் இயக்குனர் யுவான் ஜிமிங், சீன அரசின் சி.ஜி.டி.என். தொலைக்காட்சிக்கு ஒரு நேர்காணல் வழங்கினார். அதில் அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை அவர் நிராகரித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்கள் நிறுவனத்தில் என்ன வகையான ஆராய்ச்சி நடக்கிறது? நிறுவனம் எவ்வாறு செயல்படுகிறது? என்பதை நாங்கள் அறிவோம். வைரஸ் எங்களிடம் இருந்து வருவதற்கு வழி கிடையாது.

எங்களிடம் கடுமையான ஒழுங்குமுறை விதிகள் இருக்கின்றன. ஆராய்ச்சிக்கான நடத்தை நெறிமுறைகளும் இருக்கின்றன. எனவே நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

எங்கள் ஆய்வுக்கூடத்தில் செயற்கையாக கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டு, அங்கிருந்துதான் வெளியே வந்துவிட்டதாக அமெரிக்கா கூறும் குற்றச்சாட்டு, துரதிர்ஷ்டவசமானது.

சிலர் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். இது முழுக்க முழுக்க யூகத்தின் அடிப்படையிலானது.

இதன் நோக்கங்களில் ஒன்று, மக்களை குழப்புவதும், எங்கள் தொற்று தடுப்பு மற்றும் அறிவியல் நடவடிக்கைகளில் தலையிடுவதும்தான். அவர்கள் நோக்கம் ஒரு விதத்தில் நிறைவேறி இருக்கலாம்.

ஒரு விஞ்ஞானி என்ற முறையிலும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர் என்ற விதத்திலும், அது சாத்தியம் அற்றது (ஆய்வுக்கூடத்தில் செயற்கையாக வைரசை உருவாக்குவது) என்பது எனக்கு தெரியும்.

வைரசை மனிதனால் உருவாக்க முடியாது. கொரோனா வைரஸ் செயற்கையானது என்பதை நிரூபிக்க எந்தவொரு ஆதாரமும் கிடையாது.

சில விஞ்ஞானிகள் ஒரு வைரஸைத் தொகுக்க அசாதாரணமான நுண்ணறிவும், மிகப்பெரிய உழைப்பும் தேவை என்று நம்புகிறார்கள்.

எனவே இது போன்ற ஒரு வைரஸை உருவாக்குகிற திறன், தற்போது மனிதர்களிடம் உள்ளது என்று நாங்கள் நம்பவில்லை.

கொரோனா வைரஸ் பரவத்தொடங்கியதுமே, அந்த வைரஸின் மரபணு வரிசையையும், விலங்கு மாதிரி ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியையும் உலக சுகாதார நிறுவனத்துடனும், உணவு மற்றும் விவசாய நிறுவனத்துடனும் பகிர்ந்துகொண்டோம். - இவ்வாறு அவர் கூறினார்.

கொரோனாவைக் கண்டறியும்

# ரேபிட் கிட்கள் மூலமான பரிசோதனைகள் நிறுத்தம்

## இந்திய மருத்துவக் கவுன்சில் அவசர நடவடிக்கை

இந்தியாவில் கொரோனா பரிசோதனையை விரைவுபடுத்துவதற்காக சீனாவில் இருந்து தருவிக்கப்பட்ட ரேபிட் டெஸ்ட் கிட் மூலம் பரிசோதனை செய்வதை இரு நாள்களுக்கு நிறுத்துமாறு இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபை அனைத்து மாநில



அரசுகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா நோய் தொற்று இருப்பதை விரைவாக கண்டறிவதற்கு இந்த ரேபிட் டெஸ்ட் கிட்கள் உதவும். கடந்த சில நாள்களுக்கு முன்னர்தான் இந்தக் கிட்கள் சீனாவில் இருந்து இந்தியா வந்து சேர்ந்தன. உடனடியாக அவை கொரோனா தொற்றுக் கண்டறியப்பட்டுள்ள மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கடந்த சில நாட்களாக தமிழகம் உள்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ரேபிட் கிட் மூலம் பரிசோதனை நடைபெற்று வரும் நிலையில், ரேபிட் கிட்டின் பரிசோதனை முடிவுகள் துல்லியமானதாக இல்லை எனக்கூறி ராஜஸ்தான் அரசு நேற்று அதனை நிறுத்தி வைத்தது.

இதையடுத்து இரு தினங்களுக்கு கொரோனாவைக் கண்டறிய ரேபிட் டெஸ்ட் கிட்களை பயன்படுத்த வேண்டாம் என இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த இரு தினங்களுக்கு கொரோனாவைக் கண்டறிய ரேபிட் டெஸ்ட் கிட்களை பயன்படுத்த வேண்டாம். ரேபிட் கிட் கருவிகள் மாறுபட்ட முடிவுகளை காட்டுவதாக வெளியான தகவலையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரேபிட் கிட் டெஸ்ட் கருவிகளின் தரத்தினை பரிசோதித்து வருகிறோம், மீண்டும் இந்தக் கருவிகளை கொண்டு சோதனையை தொடங்குவது பற்றி விரைவில் அறிவுறுத்தல் வழங்கப்படும் என தெரிவித்துள்ளது.

# 3 நாள்களாக 150 கி.மீ. நடந்த சிறுமி இறப்பு!



3 நாட்களாக 150 கிலோ மீற்றர்கள் தூரத்தை நடந்தே கடந்த 12 வயதுச் சிறுமி ஒருத்தி சொந்த ஊரை நெருங்கும் போது உயிரிழந்தார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு இந்தியாவில் திடீரேன ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு வந்து கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வந்த பல ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளுக்கு, சொந்தக் கிராமங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் சிக்கிக்கொண்டனர்.

அவ்வாறு சிக்கிக்கொண்டவர்களை அவர்கள் தங்கியிருந்த இடங்களிலேயே தொடர்ந்தும் தங்குமாறு அரசு கேட்டுக்கொண்டது. அவர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. ஆனாலும் ஊரடங்கு தொடர்ந்ததால் தொழிலாளர்கள் தத்தமது ஊர்களுக்கு நடந்தே திரும்பத் தொடங்கினார்.

அவ்வாறு தெலுங்கானாவில் இருந்து சத்தீஸ்கர் மாநிலத்திற்கு நடந்து சென்ற குடும்பத்தில் இருந்த 12 வயதுச் சிறுமியே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சத்தீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி ஜாம்லோ மக்தாமும் அவரோடு சேர்ந்த சிலரும் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மிளகாய் தோட்டத்தில் வேலை செய்தனர். ஊரடங்கு நீட்டிக்கப்பட்டதால், ஏப்ரல் 15ஆம் திகதி ஜாம்லோ மக்தாம் மற்றும் 11 தொழிலாளர்கள் கால்நடையாகச் சொந்த ஊருக்குப் புறப்பட்டனர்.

3 நாட்களாக சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவைக் கடந்த அவர்கள், சனிக்கிழமை மாலை சொந்த ஊரை நெருங்கினர். ஊருக்கு வருவதற்கு 14 கிலோ மீட்டர் தூரம் இருந்த நிலையில், சிறுமி ஜாம்லோ மக்தாம் திடீரென கடுமையான வயிற்றுவலியால் துடித்துள்ளார். பின்னர் சிறிது நேரத்தில் மயங்கி விழுந்து இறந்துவிட்டார். அதன் பின்னர் அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது.

பரிசோதனையில் அவருக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்பது தெரியவந்தது. நீண்ட நேரம் நடந்ததால் ஏற்பட்ட களைப்பு, நீர்ச்சத்து மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக சிறுமி உயிரிழந்திருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். அவர் சரியாக சாப்பிடவில்லை எனத் தொழிலாளர்கள் சிலர் கூறினர்.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு மாநில அரசு சார்பில் ஒரு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கை பயனோடு உபயோகப்படுத்திய குடும்பம்

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த கணவன் – மனைவி இருவரும் ஊரடங்கு காலத்தில் சோர்ந்து இருக்காமல் உருப்படியான ஒரு பணியை செய்துள்ளனர்.

ஊரடங்கால் நாடு முழுவதும் பல்வேறு தொழில்கள் முடங்கி, பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் முதல் தினக்கூலி தொழிலாளர்கள் வரை வேலை இழந்து வீடுகளில் முடங்கி உள்ளனர். அதேநேரம் வருமானம் இல்லாத நிலையிலும், ஊரடங்குக் காலத்தைச் சிலர் மிகவும் பயனுள்ளதாக மாற்றுகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த கஜானன் மற்றும் அவரது மனைவி இணைந்து, 21 நாட்கள் கடுமையாக உழைத்து ஒரு கிணறு தோண்டி உள்ளனர். வாஷிம் மாவட்டம் கார்கேடா கிராமத்தைச் சேர்ந்த இந்தத் தம்பதி, ஊரடங்கு காலத்தில் உருப்படியான இந்த வேலையை செய்ததை பெருமையாகக் கூறுகின்றனர்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் வெளியில் எங்கும் வேலைக்குகூட செல்ல முடியவில்லை. அதனால், ஏதாவது செய்ய வேண்டும் என நானும் என் மனைவியும் முடிவு செய்தோம். அதன்படி வீட்டு வளாகத்தில் கிணறு தோண்ட முடிவு செய்து, பூஜைகள் செய்து வேலையைத் தொடங்கினோம்.

இதைப் பார்த்த அக்கம்பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் எங்களைக் கிண்டல் செய்தனர். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் கிணறு தோண்டும் பணியை தொடர்ந்து செய்தோம். 21ஆவது நாளில் 25 அடி ஆழம் தோண்டியபோது ஊற்று வெளிப்பட்டு தண்ணீர் பெருக ஆரம்பித்தது என்றார் கஜானன்.

இப்போது ஊரே சேர்ந்து கணவன் – மனைவியைப் பாராட்டி வருகின்றது.



கொரோனா தடுப்புப் பணியின்போது

# சுகாதாரப் பணியாளர்கள் இறந்தால் அரச மரியாதையுடன் இறுதிச் சடங்கு



கொரோனா தடுப்பு நடவடிக்கையில் உயிரிழக்கும் மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 50 லட்சம் இந்திய ரூபாய் (ஒரு கோடி 30 லட்சம் இலங்கை ரூபாய்) இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் மே 3ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்தை கடந்துள்ளது. கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 600 ஆக உயர்ந்துள்ளது.

## குடும்பங்களுக்கு கோடி ரூபாய் நிதி உதவி

இந்த நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கையில் இறக்கும் மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, ஒடிசா முதல் மந்திரி நவீன் பட்நாயக் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா வைரசுக்கு எதிராகப் போராடும் சுகாதார பணியாளர்கள் மற்றும் உதவியாக உள்ளவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ. 50 லட்சம் நிவாரணம் அளிக்கப்படும்.

அவர்களது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும். அவர்களின் ஈடு இணையில்லாத பணியை பாராட்டி விருது வழங்கப்படும்.

மேலும், கொரோனா தடுப்பு பணியில் உள்ளவர்கள் மீது யார் தாக்குதல் நடத்தினாலும் அவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

# கிருமிநாசினி கட்டாயமாகப் பருக்கி துப்புரவுத் தொழிலாளி படுகொலை!

## உத்தரபிரதேச மாநிலத்தில் சம்பவம்

இயந்திரத்தின் மூலம் கிருமிநாசினி தெளித்தபோது எதிர்பாராத விதமாக அருகில் இருந்த நபரின் காலில் மருந்து பட்டதால் துப்புரவுத் தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேச மாநிலத்தில் கொரோனா தடுப்பு பணியில் உள்ளவர்களைத் தாக்குபவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த மாநில முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டபோதிலும், அங்கு சுகாதார பணியாளர்கள் தாக்கப்படும் சம்பவம் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கிறது.

ராம்பூர் மாவட்டத்தில் நடந்த கொடூர சம்பவம் ஒன்று தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அங்குள்ள மோதிபுரா கிராமத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் விதமாக கடந்த 14ஆம் திகதி கிருமிநாசினி தெளிக்கும் பணியில் துப்புரவு தொழிலாளியான குன்வார்பால் ஈடுபட்டுள்ளார். அவர் இயந்திரம் மூலம் கிருமிநாசினி திரவத்தை தெளித்துக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக அங்கு நின்று கொண்டிருந்த இந்திரபால் என்பவரின் காலில் மருந்து பட்டதாகத் தெரிகிறது.

இதனால் ஆத்திரம் அடைந்த இந்திரபால் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் சேர்ந்து எந்திரத்தை பறித்து, அதில் இருந்த குழாயை குன்வார் பால் வாயில் திணித்து கட்டாயப்படுத்தி கிருமிநாசினி திரவத்தை குடிக்க வைத்துள்ளனர். இதையடுத்து மொராதாபாத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட குன்வார் பால், 3 நாள் அளிக்கப்பட்ட தொடர் சிகிச்சை பயனளிக்காமல் கடந்த 17ஆம் திகதி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து குன்வார் பாலின் சகோதரர் அளித்த முறைப்பாட்டின் மீது இந்திரபால் உள்பட 5 பேர் கொண்ட கும்பல் மீது வழக்குப் பதிவு செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இதுவரை யாரையும் கைது செய்யவில்லை என தெரிவித்த பொலிஸார். உடல்கூறு பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்பு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர்.

காலைக்கதிர்
Kalaikathir



சர்வதேச புவி தினம் இன்றாகும். அதையொட்டி இக்கட்டுரை இன்று பிரசுரமாகின்றது.

திருமதி பிருந்தா மயூரன் BA (Hons)



# புவியைப் பாதுகாக்க உறுதி ஏற்போம்!

அனைத்து உயிரினங்களும் வாழக் கூடிய ஒரே ஒரு கோள் புவியாகும். அப்படிப்பட்ட புவி இன்று காலநிலை மாற்றம் காரணமாக பல்வேறு பாதிப்புக்களையும் அனர்த்தங்களையும் எதிர்கொண்டு வருகின்றது. எமது எதிர்கால சந்ததியினர் புவியில் மகிழ்ச்சியாகவும், சுகந்திரமாகவும் வாழ வேண்டுமெனில் புவியை பாதுகாப்பது மிக அவசியமானதாகும். இதற்காக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் 1970 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஏப்பிரல் 22 ஆம் திகதி சர்வதேச புவி தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஐக்கிய அமெ



ரிக்காவில் சுற்றுச்சூழலியல் நிபுணரும் மேலவை உறுப்பினருமான கேலார்ட் நெல்சன் என்பவர் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு தகுந்த நாளாக 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் 22 திகதியை தெரிவு செய்தார். வானியலின் படி இரவும் பகலும் சமமாகக் காணப்படும் இந்த நாளில் புவியின் வடஅரைக்கோளத்தில் வசந்த காலமாகவும், தென் அரைக்கோலத்தில் இலையுதிர் காலமாகவும் காணப்படுகின்றது. அவரது அழைப்பை ஏற்று 20மில்லியன் மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஏப்பிரல் மாதம் 22ஆம் திகதி புவி நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சில நாடுகளில் (பிலடெல்பியா) ஏப்பிரல் 16ஆம் தேதி தொடக்கம் 22ஆம் திகதி வரை புவி வாரமாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்று 5ஆவது சர்வதேச புவி தினம் அனுஷ்டிக்கப்பட்டுகின்றது. உலக புவி தினம் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழ் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு 'காலநிலை நடவடிக்கை' எனும் தொனிப்பொருளில் அது முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும் காலநிலை மாற்றத்தினைக் கட்டுப்படுத்துவது மிகப்பெரிய சவாலாகவே உள்ளது. இதனாலேயே புவி தினத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவை சிறப்பிப்பதற்காக 'காலநிலை நடவடிக்கை' எனும் தொனிப்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் UNFCCC நிறுவனத்தால் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. அந்த உடன்படிக்கையை நினைவுகூர்வதற்காகவும், அந்த உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குவதற்காகவும், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காகவும், அதனால் ஏற்படுகின்ற, ஏற்படவுள்ள நெருக்கடிகளை கட்டுப்படுத்துவதற்காக உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் அழைப்புவிடுதவற்காகவும் இந்தத் தொனிப்பொருள் தெரிவு செய்யப்பட்டது.

1750ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் நிலம், நீர், வளி எனப் புவியில் காணப்படும் அனைத்து பகுதிகளும் மிக வேகமாக மாசடைந்து வருகின்றன. கைத்தொழில் புரட்சியினால் மக்களது தேவைகள், வாழ்க்கைத் தரத்தின் அளவு உயர்வடைந்துள்ளமையால் கைத்தொழிற்சாலைகள், வாகனங்களின் அளவு அளவுக்கு அதீகமாக அதீகரித்து வருகின்றது. கைத்தொழில் புரட்சிக்கு பின்னரான காலப்பகுதியியல் புவியின் வெப்பநிலையும் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதற்குப் பச்சை வீட்டு வாயுக்களே பிரதான காரணமாகும்.

பச்சை வீட்டு வாயுக்கள் என்பது வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களில் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவே உருவாக்கப்பட்டதுமான மற்றும் சூரியனில் இருந்து வரும் கதிர்கள் புவியின் மேற்பரப்பில்பட்டு தெறிப்படைந்து வரும் கதிர்களை உறுஞ்சி தக்கவைத்துக் கொள்ளும் வாயுக்களாகும். இவ் வாயுக்களே புவியின் வெப்ப அதிகரிப் புக்குப் பிரதான காரணமாகும். பச்சைவீட்டு வாயுக்களாக கார்பன்டை யாக்சைடு, மீத்தேன், நைட்ரஸ்ஒக் சைடு, டைரோ புளுரோகார்பன், பெர்பு ளோரோகார்பன், ஓசோன், நீராவி போன்றவை காணப்படுகின்றன.

கைத்தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளியிடப்படும் வாயுக்களில் காபனீர்ஒட்சைட்டு, கந்தகவீர் ஒட்சைட்டு போன்ற பச்சை வீட்டு வாயுக்களில் பிரதானமானவையாகும். காபனீர்ஒட்சைட் வாயு கைத்தொழில்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகள், வாகனங்களிலிருந்து வெளியிடப்படும் புகைகள், குப்பைகளை எரித்தல் போன்ற செயற்பாடுகளின் மூலமும் வெளியிடப்படுகின்றது. இவ்வாயு சராசரியாக 10,000 ஆண்டுகள் வரை வளிமண்டலத்தில் நிலைத்திருக்கின்றன. இவ்வாயு கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் வளிமண்டலத்தில் 280ppm ஆக காணப் பட்டு 2002 ஆம் ஆண்டளவில் 387ppm ஆக உயர்வடைந்துள்ளது. மீதேன் வாயுவானது பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளான ஆடு, மாடு, எருமை, ஒட்டகம் போன்ற விலங்கு கள் இரைமீட்கும்போது அவற்றின் சமிபாட்டு தொகுதியிலிருந்து சுரக்கப்படும் ஒருவகை நொதியத்தினால் வளிமண்டலத்துக்கு வெளிவிடப்படுகின்றது. இவ் வாயுக்கள் சராசரியாக 1,213 ஆண்டுகள் வரை வளிமண்டலத்தில் நிலைத்திருக்கக்கூடியவை. இதன் GWP ஆனது 20 வருடங்களில் 72 ஆகவும், 100 வருடங்களில் 25 ஆகவும், 500 வருடங்களில் 7.6 ஆகவும் குறைவடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. மீதேன் வாயுக்கள் வளிமண்டலத்தில் நிகழும் வேதியல் மாற்றத்தின் போது நீராகவும், காபன்டைஒட்சைட்டாகவும் மாறுகின்றது. இவ்வாயு கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் 700ppbஆக காணப்பட்டு தற்போது 1745ppb ஆக உயர்வடைந்துள்ளது. நைட்ரஸ் ஒக்ஸைட்டு வாயு வளிமண்டலத்தில் சராசரியாக 114 வருடங்கள் நிலைத்திருக்கக்கூடியது. இதன் GWP ஆனது 20 வருடங்களில் 289 ஆகவும், 100 வருடங்களில் 298 ஆகவும், 500 வருடங்களில் 153 ஆகவும் காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இவ்வாயு முன்னர் 270ppb ஆக காணப்பட்டு தற்போது 314ppb ஆக உயர்வடைந்துள்ளது. குளோரோபுளோரோகார்பனின் குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டிகள், வாசனை திரவியங்களிலிருந்து வெளிவிடப்படுகின்றது. ஆயுட்காலம் சராசரியாக 100 வருடங்களாகும். இதன் ppb ஆனது இருபது வருடங்களில் 11,000. நூறு வருடங்களில் 10,900 ஆகவும் ஐந்நூறு வருடங்களில் 5,200 ஆகவும் காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. டைரோகுளோரோ புளோரோகாபனின் சராசரி ஆயுட்காலம் 12 வருடங்களாகும்.

> புவி பல வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை மனிதனுக்கு மாத்திரம் சொந்தமானவை அல்ல. புவியில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும் சொந்தமானவை. இயற்கை வளங்களை நாம் திட்டமிட்டமுறையில் சிக்கனமான பயன்படுத்த வேண்டும். அது போன்று மற்றய உயிரினங்களையும் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும்.



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# புவியைப் பாதுகாக்க .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் ppb ஆனது இருபத. வருடங்களில் 5 160, நூறு வருடங்களில் 1810, ஐந்நூறு வருடங்களில் 549 ஆகவும் காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. ட்ராபுளோரோ மீத்தேனனின் சராசரி ஆயுட்காலம் 50 000 ஆண்டுகளாகும். இதன் ppb ஆனது இருபது வருடங்களில் 16 300, நூறு வருடங்களில் 7390, ஐந்நூறு வருடங்களில் 11 200 ஆகவும் நைட்ரஜன் டரைபுளோரைட்டின் சராசரி ஆயட்காலம் சராசரியாக 740 ஆண்டுகளாகும். இதன் ppb ஆனது இருபது வருடங்களில் 12 300, நூறு வருடங்களில் 17 200, ஆகவும் ஐந்நூறு வருடங்களில் 20 700 ஆக காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பச்சைவீட்டு வாயுக்கள் சூரிய கதிர்களை அகத்துறுஞ்சி வைத்திருப்பதால் புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகின்றது. புவியின் வெப்பநிலை அதிகரிப்பதால் காலநிலை மாற்றம் எனும் பிரதான் பிரச்சினை உருவாகியுள்ளது. காலநிலை மாற்றத்தின் மூலம் வெள்ளப்பெருக்கு, வறட்சி, அளவுக்கு அதீகமான மழைவீழ்ச்சி, முனைவு, உயரமாக மலைகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுதல், கடல் நீர்மட்டம் உயர்வடைதல், காட்டுத்தீ ஏற்படுதல், சூறாவளி, முருகைக் கற்பாறைகள் அழிவடைதல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் அதிகளவில் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக புவி வெப்ப அதிகரிப்பால் காட்டுத்தீ அதிகளவில் ஏற்பட்டுவருகின்றது. உதாரணமாக அண்மைக்காலங்களில் அமேசன் காடுகள், ஆஸ்திரேலியக் கண்டத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயைக் குறிப்பிடலாம்.

புவியின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தல், உலகம் முழுவதும் மழைவீழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதில் அமேசன் காடுகளின் பங்கு முக்கியமானதாகும். உலக மக்களுக்கு தேவையாக ஒட்சிசனில் 20 வீதமானவற்றை அமேசன் காடுகளே வழங்குகின்றன. இதனால் சூழலியலாளர்கள் அமேசன் காடுகளை 'உலகின் நுரையீரல்' என குறிப்பிட்டத்துடன் 'அமேசன் காடுகளை அழிப்பதும், புவியை அழிக்க முற்படுவதும் ஒன்று' என குறிப்பிட்டுள்ளனர்.

அமேசன் காடுகளில் ஏற்படுகின்ற தீ பற்றி பிரேசிலில் உள்ள விண்வெளி ஆய்வுமையம் 'பிரேசிலில் 2019 ஆம் ஆண்டு மாத்திரம் 72, 843 காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகவும் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 80 வீதத்தால் அதிகரித்துள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்தநாளில், இயற்கைவளத்தைப் பாதுகாத்து, புவியின் நலனைப் பாதுகாக்க நாம் உறுதியேற்க வேண்டும். இதற்காக நாம் பெற்றோல், டீசல், நிலக்கரி போன்ற உயிர்சுவட்டு எரிபொருள்களின் பாவனையை குறைத்து காற்று, சூரியசக்தி, கடலலைசக்தி போன்ற மாற்று சக்கிவளங்களைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் நீர், மின்சாரம் போன்றவற்றை நாம் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். இதன் மூலமாகவே புதுப்பிக்க முடியாத வளங்களை நமது எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்த முடியும். காடுகளை அழித்தல், தாழ்நிலங்களை நிரப்புதல், ஈரநிலங்களை மீட்டல், கட்டுப்பாடற்றவகையில் விலங்குகளை வேட்டையாடுதல், கடலில் மீன்களை பிடித்தல் போன்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

புவி பல வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை மனிதனுக்கு மாத்திரம் சொந்தமானவை அல்ல. புவியில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும் சொந்தமானவை. இயற்கை வளங்களை நாம் திட்டமிட்டமுறையில் சிக்கனமான பயன்படுத்த வேண்டும். அது போன்று மற்றய உயிரினங்களையும் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் புவியின் எதிர்காலம் சிறப்பாக அமைவதுடன் அனைத்து உயிரினங்களும் மகிழ்ச்சியாக வாழ முடியும்.






# இலங்கை மாணவர்கள் 113 பேர் பாகிஸ்தானிலிருந்து திரும்பினர்







கொழும்பு, ஏப்.22

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கை மாணவர்களை அழைத்துவரச் சென்ற சிறப்பு விமானத்தில் மாணவர்கள் வந்த புகைப்படம் வெளியாகி உள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் சிக்கியுள்ள மாணவர்கள் இலங்கை வருவதற்கு தயாராகி இருந்தனர்.

இதன்படி பாகிஸ்தான் கராச்சி நகரிலிருந்து 113 இலங்கை மாண வர்களை அழைத்து வந்த காட்சிகள் இணையத் தளத்தில் வெளியாகி உள்ளன.

இந்த விமானம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுத் தரையிறங்கியது.

விமானத்திலும் விமான நிலையத்திலும் சமூக இடைவெளியைக் கடைப் பிடித்து இவர்கள் வருகைத்தருகின்றனர்.

மேலும் இவ்வாறு வருகைத்தரும் மாணவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பட்டு இரு வார அவதானிப்பின் பின்னரே தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துரை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com




நஞ்சற்ற மரக்கறிகள் விற்பனைக்கு
கற்பகவனம் இயற்கை விவசாயப் பண்ணையில் இருந்து
வரும் வெள்ளிக்கிழமை (24-04-2020)
நஞ்சற்ற மரக்கறிப் பொதி (4kg - Organic)
உங்களின் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.
உள்ளடக்கம்: 5 வகையான மரக்கறிகள்,
ஒரு கீரைவகை, ஒரு பழம்.
வியாழன் மாலை 6 மணிக்கு முன்னர் பதிவுசெய்யுங்கள்
தொடர்புகளுக்கு: 077 411 4422

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள்
விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி,
பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி,
பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான
செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள்
ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில்
நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில்
பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg
பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம்
செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம்
ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால்
உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம்
நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# தனிமைப்படுத்தலைத் தவிர்ப்பதற்காக புதுக்கடையிலிருந்து யாரும் தப்பினரா?

## படையினர் தேடுதல், விசாரணை

கொழும்பு,ஏப்.22

கொழும்பு புதுக்கடை பண்டாரநாயக்க மாவத்தையிலிருந்து யாரும் தப்பி ஏனைய பகுதிகளுக்கு சென்றுள்ளார்களா என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அங்குள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பும் பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அதேசமயம் இந்தப் பகுதிகளில் இருந்து தப்பி அண்டிய பகுதிகளுக்கு யாரும் தப்பிச் சென்றுள்ளார்களா என்பது குறித்து படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாத இருவருக்கு ஞாயிறன்று கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் மேலும் பலருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அங்கிருந்து யாரும் அண்டிய பகுதிகளுக்கு தப்பி சென்றுள்ளார்களா என்பது குறித்து படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோ.சைக்கிளுடன் மோதிய ஓட்டோவின் சாரதி மரணம்

## கினிகத்தேனையில் சம்பவம்

கினிகத்தேனை கம்பளை பிரதான வீதியில் ஓட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஓட்டோச் சாரதி பரிதாபமாக உயிரிழந்துள்ளர் என நாவலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றதாகபொலிஸார் கூறினர் .

கம்பளைபகுதியில்இருந்து கினிகத்தேனை பகுதிக்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு மீண்டும் வீடு திரும்பிய வேளையிலேயே ஓட்டோச் சாரதி இந்த விபத்தில் சிக்கினார் என்று கூறப்பட்டது. மோட்டார்சைக்கிளைச்செலுத்தி வந்த நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி நாவலபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கம்பளை பகுதியை சேர்ந்த 54 வயதுடைய நபரே இந்த விபத்தில் உயிரி ழந்திருக்கின்றார் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நாவலபிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரி - 56 ரகத் துப்பக்கியால் சுட்டவர் அதனுடன் சேர்த்து மடக்கப்பட்டார்

## சம்மாந்துறை பகுதியில் சம்பவம்



இரண்டு குழுக்களுக்கிடையில் மதுபோதையில் இடம்பெற்ற ஒரு பிரச்சினையின் போது துப்பாக்கி சூடு நடத்திய சந்தேக நபர் ரி - 56 ரக துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செந்நெல் கிராமத்தில் திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜயலத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி விஜயராஜா குழுவினர் துப்பாக்கி சூடு இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் - நேற்று 26 வயதுடைய சந்தேக நபரையும் அவர்துப்பாக்கி சூட்டை மேற்கொண்ட பின்னர் மறைத்து வைத்திருந்த ரீ 56 ரக துப்பாக்கி மற்றும் 9 ரவையுடன் கூடிய ரவைக்கூட்டையும் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது இரு துப்பாக்கி வேட்டுக்களை சந்தேக நபர் தீர்த்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் சந்தேக நபரை இன்று புதன்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.




# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1



படம் 2

படம் 1
அறிவுச்செல்வன் அறிவு ஆதித்தன் - தரம்- 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

படம் 2
ச. அக்ஷரா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை - கரவெட்டி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - ‘பூமாலை’

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘வைக்கோற் போர்’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பிரபாகர் மயூரி - தரம் 7
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எம். எவ். எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

த. ஆருசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

எம். சி. ஜோசுவா சொலொமன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எம். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ரமேஷ் ரம்மியன் - தரம் 5
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

யதுஷி ரமேஷ் - தரம் 8
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

சானுஜா சுகுணவேள்
ஈஸ்வரன் முன்பள்ளி - அளவெட்டி

வ. சஞ்சனா - தரம்
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பிராமி சுதர்சன் - தரம் 9
இந்து மகளிர் கல்லூரி - வெள்ளவத்தை

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikathir

### பூமாலை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

**இன்று (22/04/2020) தலைப்பு பூமாலை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த கோட்டா உறுதிமொழி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு வகை கூறவேண்டியவர்களைச் சரியாக இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் நான் எனது மக்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் ஒரு வருடம் நேற்று நிறைவடைந்ததை முன்னிட்டுத் தாம் வெளியிட்ட செய்தியிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். அந்தச் செய்தியின் முழு விவரம் வருமாறு:-

கொடூர தீவிரவாத கருத்தினைக் கொண்ட ஒரு குழுவினர் 2019 ஏப்ரல் 21 ஞாயிறன்று முக்கிய கத்தோலிக்க தேவாலயங்களையும் சுற்றுலா ஹோட்டல்கள் சிலவற்றையும் இலக்குவைத்து மேற்கொண்ட பாரிய மனிதப் படுகொலைகள் இடம்பெற்று இன்று ஒரு வருடம் நிறைவடைகின்றது.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான குற்றத்தின் மூலம் உயிரிழந்தவர்களினதும் கடுமையாக காயப்பட்டவர்களினதும் குடும்ப உறுப்பினர்களுக்கும், அதனால் பெரிதும் கவலைக்குள்ளான கத்தோலிக்க மக்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் நான் எனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலை தாக்குதலினால் சுமார் 270பேர் உயிரிழந்தனர். சுமார் 500 பேர் காயமுற்றனர். காயமடைந்தவர்களில் சிலர் பின்னர் உயிரிழந்தனர். இன்னும் சிலர் அங்கவீனமுற்றுள்ளனர்.

தாக்குதலில் உயிரிழந்த பெரும்பாலானவர்கள் கத்தோலிக்க சமயத்தவர்கள் என்ற போதும் அது அவர்களை மட்டுமன்றி முழு இலங்கை மக்களையும் இலக்கு வைத்த பயங்கரவாத நடவடிக்கையாகும். எந்த சிந்தனையின் பெயரில் இந்த மனிதப் படுகொலை இடம்பெற்றாலும் இது மனித இனத்திற்கே இழுக்கான ஒன்றாகும்.

தேசிய பாதுகாப்பை மறந்து பாதுகாப்பு திட்டங்களும் ஏற்பாடுகளும் கைவிடப்பட்டிருந்த காரணத்தினாலேயே உயிர்த்த ஞாயிறு மனிதப் படுகொலைக்கு வசதியான பின்னணி உருவானது. அத்தகையதொரு கட்டற்ற சூழலில் தீவிரவாதமும் பயங்கரவாதமும் தலைதூக்குவது ஆச்சரியமான ஒன்றல்ல.

'சுபீட்சத்தின் நோக்கு' என்ற எனது கொள்கைப் பிரகடனத்தில் உறுதியளித்தவாறு எனது ஆட்சிக் காலத்தில் அனைத்து இனங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், எந்தவகையிலும் தீவிரவாதத்திற்கும், தீவிரவாத வன்முறைக்கும் இடமளிக்கப்போவதில்லை என்றும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு வகை கூற வேண்டியவர்களை சரியாக இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் நான் எனது மக்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியான, பாதிப்புக்கு உள்ளான கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட இலங்கை மக்களுக்கு நான் மீண்டும் எனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## திரிபோஷாவை வீடுகளுக்கு சென்று வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 22

சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான திரிபோஷாவை வீடுகளுக்கு சென்று வழங்கும் வேலைத்திட்டத்தை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

குடும்பநல உத்தியோகத்தர்களால் இந்தப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறுவர்களின் கடந்த மாத நிறையின் அடிப்படையில் திரிபோஷா வழங்கப்படுமென, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் விற்றமின் மாத்திரைகளையும் வீடுகளுக்குச் சென்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## உண்மையான குற்றவாளியை அரசு கண்டுபிடிக்க வேண்டும்

### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ரிஷாத் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், அரசியல்வாதிக்காக அப்பாவி நபர்களை குற்றவாளியாக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் வலைத்தளத்திலேயே ரிஷாத் பதியுதீன் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

அத்துடன் இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் தான் பிரார்த்தனை செய்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சமூகத்திலிருந்த வந்தவனான தான், பயங்கரவாதத் தாக்குதலால் படும் வேதனையை நன்கு அறிவேன் என்றும் பதிவிட்டுள்ளார்.

## 34,500 பேர் கைது

கொழும்பு, ஏப். 22

நாட்டில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 34,500 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸ் ஊடகப்பேச்சாளர்ஜாலியசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் 8,800 க்கு மேற்பட்ட வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை வரையான கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் 650 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 168 வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2020 இல் வெளியிடப்பெற்றது.